# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 28 ஞாயிற்றுக்கிழமை (13-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 247


# மேயர் சிவபாலன், மெண்டிஸ் இறுதிச் சடங்குகள் நாளை!

## பூதவுடல்கள் இன்று அஞ்சலிக்கு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13

நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட யாழ். மாநகர மேயர் பொ. சிவபாலன், மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ள யாழ். நகர இராணுவத் தளபதி சுஸந்த மெண்டிஸ் ஆகியோரின் இறுதிச் சடங்குகள் நாளை முறையே யாழ்ப்பாணத்திலும் கண்டியிலும் நடைபெற உள்ளன.

யாழ். மேயரின் பூதவுடல் இன்று சித்தன் கேணியில் இருந்து எடுத்து வரப்பட்டு யாழ், ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் காரியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

நாளை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் மாயானத்தில் ஈமக் கிரியைகள் நடைபெறும்.

மேஜர் ஜெனரல் சுஸந்த மெண்டிஸின் பூதவுடல் இன்று கண்டியில் உள்ள அவரது இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிபந்தனையுடனேயே பேச்சு என்கிறார் அனுருத்த

கொழும்பு, செப். 13

சில நிபந்தனைகளுடன் மட்டும் அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும். எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியதைப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் அஞ்சலிக்காக மூவரின் பூதவுடல்கள்

யாழ்ப்பாணம், செப். 13

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட யாழ். மாநகரசபை வேலைப் பகுதி பொறியியலாளர் எம். ஈஸ்வரம் தட்டெழுத்தாளர் பொ. பத்மராஜா கட்டட வரைபடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரத்தினம் ஆகியோரின் பூதவுடல்கள் நேற்று நல்லூர் பண்டார மாளிகை வளவிலுள்ள மாநகர சபை கட்டடத்தில் மாநகர சபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், ஈ.பி.ஆர்.எல் எவ்., ஈ.பி.டி.பி., ரெலோ ஆகிய கட்சிகளின் பிரமுகர்களும், பொதுமக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனித நீதிக்கான நடவடிக்கை குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். நகர முதல்வர் மற்றும் யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்களின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிக்கும் முகமாக நாளை கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கம் அனுஷ்டிக்குமாறு மனிதநீதிக்கான நடவடிக்கை குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனித நீதிக்கான குழுவில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

[இ-5-6]

# மாநகரசபை ஊழியர்கள் நேற்று பொலிஸாரினால் தீவிர விசாரணை

## இடிந்த கட்டடப் பகுதி படையினரின் பாதுகாப்பில்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையப் பொலீஸாரும் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இச்சம்பவத்தின்போது கட்டடத்தின் உள்ளே இருந்த மாநகரசபை ஊழியர்களும் அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் சிலரும் நேற்றுப் பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சம்பவம் நிகழ்ந்த மாநகர சபை வளவில் காவல் கடமையிலிருந்த காவலாளியான மங்களேஸ்வரன் தேவசிங்கம் (35 வயது) தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்றுவரை அவர் விடுவிக்கப்படவில்லை.

அதேசமயம் குண்டுவெடிப்பால் சேதமடைந்த கட்டடப் பகுதி இன்னும் இராணுவத்தினரின் பாதுகாப்பிலேயே இருந்து வருகிறது. உள்ளே செல்ல எவரும் அனுமதிக்கப்படவில்லை.

(இ-9173-139-15-5)

## மேஜர் ஜெனரலாக மெண்டிஸ் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், செப். 13

நேற்று முன்தினம் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட யாழ். நகரத்தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் மேஜர் ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

மரணத்தின் பின் வழங்கப்படும் பதவி உயர்வு இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ஏனைய ராணுவ பொலீஸ் அதிகாரிகளும் பதவி உயர்தப்பட்டுள்ளனர். என்று தெரியவருகிறது.

(இ-7)

## அலவி, பலகல்ல நேற்று மேயர் வீடு சென்று அஞ்சலி!

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் அலவி மௌலானா மற்றும் வடக்கின் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல ஆகியோர் நேற்று மாலை சித்தன்கேணிக்குச் சென்று யாழ். மாநகர மேயர் பொ. சிவபாலனின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

அரசாங்கத்தின் விசேட பிரதிநிதியாக அலவி மௌலானா நேற்று யாழ்ப்பாணம் வந்து சிவபாலனின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

குண்டுத் தாக்குதலினால் சேதமடைந்த மாநகரசபைக் கட்டடத்தையும் அலவி மௌலானா நேற்று சென்று பார்வையிட்டார். (இ-9)

## குடா நாட்டுக்கு கப்பலில் ஏற்றப்பட்ட சாராயம் பறிமுதல்

கொழும்பு, செப். 13

யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்காக கப்பலில் ஏற்றப்பட்ட ஐயாயிரம் போத்தல் சாராயம் கொழும்பில் மதுவரி திணைக்கள அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் கப்பலுக்குள் நுழைந்த மதுவரித் திணைக்கள அதிகாரிகள், ஆவணங்களைச் சோதனை செய்த பின்னர் அந்த சாராயம் போலி ஆவணங்களின் மூலம் பெறப்பட்டவை எனக் கூறி அவற்றை கப்பலில் இருந்து இறக்கி தடுத்து வைத்துள்ளனர் என கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி ஐயாயிரம்போத்தல் சாரயம் முறையற்றவகையில் போலி ஆவணங்களைப்பயன்படுத்தி அதிகாரம் அளிக்கப்படாத சிலரிடம் இருந்து வாங்கப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-9)

## ஆவணங்கள், கோவைகள் மீட்கப்படாத நிலையில்!

யாழ்ப்பாணம், செப். 13

குண்டு வெடிப்பினால் சேதமடைந்துள்ள யாழ். மாநகர சபைக் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள மாநகர சபையின் முக்கிய ஆவணங்கள், அலுவலகக் கோவைகள் நேற்று வரை மீட்கப்படவில்லை.

இக் கட்டடப் பகுதிக்குள் எவரும் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இந்த ஆவணங்கள் மற்றும் அலுவலகக் கோவைகளை வெளியே எடுப்பதற்கு யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் நேற்று பாதுகாப்பு வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

(இ-173-15-6-5)

## முல்லைத்தீவு கடலில் படகு மீது தாக்குதல்

கொழும்பு, செப். 13

கண்ணாடி இழைப் படகு ஒன்று கடற் படையினரின் தாக்குதலுக்கு உள்ளானது.

இச்சம்பவம் கடந்த வியாழன் மாலை 6.30 மணியளவில் முல்லைத்தீவுக் கடற் பகுதியில் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றிரவு அறிவித்தது.

சம்பவதினம் கண்ணாடி இழைப் படகு ஒன்று முல்லைத்தீவுக் கடற் பகுதியில் இருந்து கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்ததாகவும் —

அதனைக் கண்ட கடற்படையினர் பல தடவைகள் படகை நிறுத்துமாறு எச்சரிக்கை விடுத்தனர் எனவும் —

எனினும் படகில் சென்றவர்கள் கடற்படையினரின் அறிவுறுத்தல்களைக் கேட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா முடித்த கப்பலில் 1,500பேர் வருகின்றனர்

திருகோணமலை, செப். 13

திருமலையில் இருந்து நாளை பிற்பகல் காங்கேசன் துறை நோக்கிப் புறப்படவிருக்கும் லங்கா முடித்த கப்பல் மூலம் ஆயிரத்து 500 பேர் யாழ். வருகின்றனர்.

வன்னிப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து மன்னார் மற்றும் பேசாலை அகதி முகாம்களில் தங்கியுள்ள 6 ஆயிரம் அகதிகளில் ஒரு தொகுதியினரே நாளை மறுதினம் யாழ். வரவுள்ளனர்.

இதேவேளை லங்கா முடித்த கப்பல் மூலம் யாழ். அனுப்பப்படவிருக்கும் ஆயிரம் அகதிகள் பஸ்கள் மூலம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரதிநிதிகளைக் கொல்வதை மக்கள்முன்வந்து கண்டிக்க வேண்டும்

## ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

யாழ்ப்பாணம், செப்; 13

தமிழ் மக்களுக்கான விமோசனத்திற்காகப் போராடுவதாகக் கூறுபவர்கள் தமிழ் மக்களின் நிர்வாகத்தைச் சீர் குலைப்பதும், அதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையும், அலுவலர்களையும் கொல்வதும் மக்களால் அழுத்தம் திருத்தமாக கண்டிக்கப்பட வேண்டிய செயலாகும்;

ஈ; பி. ஆர்; எல்; எவ் அமைப்பின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் மாநகரசபைக் குண்டு வெடிப்புக் குறித்து விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது;

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்; மாநகர சபையில் நேற்று முன்தினம் நடந்த குண்டுவெடிப்பில் யாழ்; மாநகர முதல்வர் உட்பட யாழ்; நகரக் கட்டளை அதிகாரி, யாழ்; மாநகர சபையின் பதி உயர் உத்தியோகத்தர்கள், பொலீஸ் அதிகாரிகள், சிவிலியன்கள் என பன்னிரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்;

பிறிகேடியரையும் பொலீஸ் உத்தியோகத்தர்களையும் கொன்று விட்டதாக புலிகள் புளகாங்கிதமடையலாம்; ஆனால் மாநகர நிர்வாகத்தை நடத்தும் நகர பிதா, பொறியியலாளர்கள், கணக்காளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் போன்ற பல உத்தியோகத்தர்கள் இக்காட்டுமிராண்டித்தனமான குண்டு வெடிப்பில் பலியாகியுள்ளனர்;

யாழ்; குடாநாட்டில் இயல்பு வாழ்க்கையை உருவாக்குவதில் இந்த அதிகாரிகளின், உத்தியோகத்தர்களின் பங்கு மகத்தானது மாத்திரமல்ல அளவிடற்கரியதும் கூட; புலிகளின் பாசிச போக்காலும், அராஜகத்தாலும், பல உயரிய கல்விமான்களையும், அரசியல் தலைவர்களையும் நாம் முன்னரே இழந்துள்ளோம்; அதே வரிசையில் எமது சமூகத்தின் அரிய பல நிர்வாகிகள் கொல்லப்படுவதானது வருந்தத்தக்கதும் வேதனைக்குரியதுமாகும்;

யாழ்; மாநகர சபையில் கொல்லப்பட்ட நகர பிதாவும் உத்தியோகத்தர்களும் துரோகிகளா? என்பதை மக்கள் தான் சொல்ல வேண்டும்; எமது மண்ணில் எமது தேவைகளை நிறைவு செய்து வாழ ஆசைப்படுவதும் கூட துரோகம் என எண்ணப்படலாமா?

துப்பாக்கித் துரைத்தனத்தால், மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொன்றும், மக்களை மிரட்டிப் பணிய வைப்பதன் மூலமும் யாரும் ஏகப் பிரதிநிதிகளாகிவிட முடியாது என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்; இக்கொலைகள் இப்படியே தொடருமானால் தமிழீழமல்ல சுடுகாடுதான் மிஞ்சும்;

எனவே எமக்கு சிவில் நிர்வாகம் வேண்டுமா? ஜனநாயகம் வேண்டுமா? அல்லது இந்தக் கொலைகாரத்தனங்கள் தொடர வேண்டுமா என்பதை மக்கள் தெளிவாகச் சொல்ல வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது என்பதை மக்களும் உணர வேண்டும்;

எமது மக்களின் நல் வாழ்விற்காக தமது இன்னுயிர்களை அர்ப்பணித்த யாழ்; மாநகர உத்தியோகத்தர்களுக்கும், முன்னாள் மேயர் சரோஜினி யோகேஸ்வரனின் கொலைக்குப் பின்னரும் யாழ். மாநகர வேலைகளை முன்னெடுத்த சிவபாலன் அவர்களுக்கும், யாழ். குடாநாட்டில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர பல முயற்சிகளை மேற்கொண்ட அரச உத்தியோகத்தர்களுக்கும், இராணுவ பொலீஸ் அதிகாரிகளுக்கும் ஈழமக்கள்புரட்சிகர விடுதலைமுன்னணி சிரந்தாழ்த்தி தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவர்களின் இழப்

10 ஆம் பக்கம் பார்க்க)

# வியாழனன்று2படையினர் சித்தாண்டியில் பலி!

யாழ்ப்பாணம், செப்; 13

மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் கடந்த வியாழன்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெற்ற தாக்குதலில் இரண்டு படையினர் உயிரிழந்தனர்;

பொதுமக்கள் போல் பாவனை செய்து கொண்டு வந்த விடுதலைப் புலிகள் ரோந்து செய்து கொண்டிருந்த படையினர் மீது கிரனேட் மற்றும் சிறிய ரக ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன;

படையினர் திருப்பித்தாக்கியதால் புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாக படைவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன; (உ-9)

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், செப் 13

யாழ், கிரிக்கெட் சங்கம் நடத்தும் 'டேர்க்கி' வெற்றிக் கிண்ணத்துக்காக 50 ஓவர்கள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று யாழ்; பற்றீஹியன் வி. க. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் புளூஸ் வி; க; அணி மோத உள்ளது.

இன்றைய ஆட்டம் காலை 9–30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்; இப்போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களும் போட்டியைப் பார்க்கச் செல்லும் ரசிகர்களும் ஆட்ட மைதானத்துக்குச் செல்வதற்காக இலவச பஸ் சேவை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும்—

இந்த பஸ்ஸில் செல்ல விரும்புபவர்கள் இன்று காலை 8-30 மணிக்கு வர்த்தக வங்கியின்யாழ். கிளைக்கு முன்பாக வருகைதருமாறும்-கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது;

அதேவேளை இன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற இருந்த கிரிக்கெட் போட்டி தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## புனரமைப்பு

வடமராட்சி, செப். 13

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மனையியல் கூடம் திருத்திப்புனரமைப்புச் செய்யப்படவுள்ளது;

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; (ஐ-173)

## கருத்தரங்கு

சுகவாழ்வு நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கருத்தரங்குகள் நடைபெறவுள்ளது;

'உள விளையாட்டுக்கள்' எனும் தலைப்பில் திருமதி கோகிலா மகேந்திரனும், 'இன்றைய போர்க்காலவடுக்கள்' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் என்; டேமியனும் கருத்துரைகளை வழங்குவர்;

# கண்ணீர் அஞ்சலிகள்

தமிழ் பேசும் மக்களின் சுதந்திர வாழ்வுக்காக
தன் உயிரை அர்ப்பணித்த
யாழ். மாநகராட்சி மன்ற முதல்வர்

## அமரர் பொன். சிவபாலன் (சட்டத்தரணி)

அவர்களுக்கும்





அவருடன் படுகொலை செய்யப்பட்ட

நிர்வாக உத்தியோகத்தர், மதில் ஆணையாளர்
**சு. பத்மநாதன்**
வேலைப்பகுதி பொறியியலாளர்
**மா. ஈஸ்வரம்**

வரைபட கலைஞர்
**திருமதி மல்லிகா இராசரத்தினம்**
சுருக்கெழுத்தாளரும் தட்டெழுத்தாளரும்
**பொ. பத்மராஜா**

ஆகியோருக்கும்

## எமது கண்ணீரை காணிக்கை ஆக்குகின்றோம்.

இந் நிகழ்வால் பாதிக்கப்பட்ட மற்றும் அனைவரது குடும்பங்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## தமிழர் விடுதலைக் கூட்டணி,

58/47, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


(சி/48 66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெள்ளை மாளிகை பாலியல் விவகாரம்

# கெனத்ஸ்ரரரின் அறிக்கை வெளியானது!

# பதவிவிலக அதிபர் கிளின்ரன் மறுப்பு!!



வாஷிங்டன், செப். 13

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட அதிபர் பில் கிளின்ரன் மீதான பாலியல் அவதூறு, குற்றச் சாட்டுத் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. சுதந்திர விசாரணையாளர் கெனத் ஸ்ராரின் இந்த 445 பக்க அறிக்கை நேற்று அதிகாலை முதல் 'இன்ரநெற்' மூலம் உலகெங்கும் வெளியாகியது.

முன்னதாக விசாரணையாளர் கெனத் ஸ்ரார் தனது அறிக்கையின் பிரதியை அமெரிக்கக் காங்கிரஸிடம் சமர்ப்பித்திருந்தார். அறிக்கையை வெளியிடுவதா? இல்லையா? என்பது குறித்து காங்கிரஸ் பிரதிநிதிகள் விவாதித்தனர். இறுதியில் அறிக்கை வெளியிடப்பட்டது.

அறிக்கை வெளியாகியுள்ளபோதிலும் தாம் பதவியில் இருந்து விலகப்போவதில்லை என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார். அதிபர் கிளின்ரன் பொய்யாகச் சத்தியப் பிரமாணம் செய்ததாகவும். உண்மையை மறைத்து நீதியைத் தடுத்ததாகவும், சாட்சிகளைக் கலைக்க முயன்றதாகவும் அந்த நீண்ட அறிக்கையில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. அதிபரின் 11 குற்றச்செயல்களை விசாரணையாளர் கெனத் ஸ்ரார் தனித்தனியாகப் பட்டியலிட்டுள்ளார் அதிபர் கிளின்ரன் மொனீக்காவுடன் கொண்டிருந்த பாலியல் உறவுகளை அந்த அறிக்கை விலாவாரியாக விவரித்துள்ளது.



இந்த அறிக்கை ஒருதலைப் பட்சமானது; திட்டமிட்டு அதிபரை அவமானப்படுத்துவது; அவரது நற்பெயரைக் கெடுப்பது என்று கூறி அதிபர் கிளின்ரனின் வழக்கறிஞர் டேவிட் கன்டில் அறிக்கையை நிராகரித்துள்ளார். கெனத் ஸ்ரார் தமது விசாரணை குறித்த விவரங்களைச் சட்ட விரோதமான முறையில் கசியவிட்டுள்ளார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

(ஐ)

## டாக்கா அணைக்கட்டு உடைக்கும் ஆபத்து!

### தடுப்பு வேலை மும்முரம்

டாக்கா, செப். 13

**பங்களாதேஷில் பொழிந்து வரும் வரலாறு காணாத அடைமழையினால் தலைநகர் டாக்காவில் உள்ள ஆற்று அணைக்கட்டு உடைப்பெடுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.**

பூரிகங்கா (Buriganga) ஆறு பெருக்கெடுக்கும் நிலை ஏற்பட்டிருப்பதால் டாக்கா நகரில் உள்ள 6 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி உள்ளனர்.

ஆற்று அணைக்கட்டில் உடைப்பெடுக்கக் கூடிய 36 இடங்களில் படையினரும், பொதுமக்களும் இணைந்து மண் அணைகளை அமைப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான மணல் முடைகள் கட்டப்பட்டு பாலங்களின் மருங்குகளில் அணைக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆறு உடைப்பெடுக்கும் பட்சத்தில் டாக்கா நகரின் பெரும்பகுதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் ஆபத்து உண்டு.

35 கிலோ மீற்றர் நீளமான ஆற்று அணைக்கட்டுப் பகுதியில் இருந்து பொதுமக்களை அப்புறப்படுத்துவதற்கான அவசர திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளன.

டாக்கா நகரின் மூன்றில் ஒருபகுதி ஏற்கனவே வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. ஆயிரக்கணக்கான மக்கள் பாடசாலைகளிலும், அரசாங்கக் கட்டடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

(ஐ)



வெள்ளம் சூழ்ந்துள்ள புறநகர்ப் பகுதியில் வள்ளம் ஒன்றில் குடிதண்ணீர் எடுத்துவரும் பங்களாதேஷ் பெண் ஒருவரை படத்தில் காணலாம்.

(ஐ)

## 36 பெட்டிகளில் அறிக்கை

வாஷிங்டன், செப். 13

சுதந்திர விசாரணையாளர் கெனத் ஸ்ராரின் விசாரணை அறிக்கை 36 பெட்டிகளில் அடைக்கப்பட்டு இரு வாகனங்களில் ஏற்றப்பட்டு காங்கிரஸ் அலுவலகத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்த அறிக்கையை வெளியிடுவதா, இல்லையா என்பது குறித்து காங்கிரஸ் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் முதல் விவாதித்து வருகின்றனர். அறிக்கையை வெளியிட முடிவு செய்யப்பட்டால் அது உடனடியாக 'இன்ரநெற்' மூலம் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## விமானம் தரையிறக்கம்

இஸ்லாமாபாத், செப். 13

ஈரானிய இராணுவ விமானம் ஒன்று ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் தலிபான்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அண்மையில் உள்ள பாமியன் நகரில் தரையிறங்கியுள்ளதாக சுயாதீன வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஆப்கானிஸ்தானை தாக்க வேண்டாம்

### அமெ. கோரிக்கை

வாஷிங்டன், செப். 11

ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல்களை நடத்தவேண்டாம் என்று அமெரிக்கா ஈரானை எச்சரித்துள்ளது. ஆப்கானிஸ்தானில் காணாமற்போயுள்ளதாகக் கூறப்படும் ஈரான் பிரஜைகள் சம்பந்தமான விடயத்தை இருநாடுகளும் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும்.— எனவும் அமெரிக்கா கேட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் 7 ஆம் திகதி ஆப்கானிஸ்தானின் வடபகுதி நகரமான மசார் ஷெரீபை தலிபான் படைகள் தங்கள் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தபோது அங்கிருந்த ஈரானிய ராஜதந்திரிகள் 10 பேரையும், ஒரு பத்திரிகையாளரையும் கைது செய்து இன்னமும் தடுத்து வைத்திருப்பதாக ஈரான் தெரிவித்திருந்தது.

ஈரானிய ராஜதந்திரிகளைக் கொன்றதற்காக ஆப்கானிஸ்தானைப் பழிவாங்கப் போவதாக ஈரானின் முன்னாள் அதிபர் [illegible] தெரிவித்துள்ளார்.

(ஐ)

## ஒஸாமா பின்லாடன் வீட்டுக் காவலில்!

லண்டன், செப். 13

சர்ச்சைக்குரிய சவுதி கோடீஸ்வரர் ஒஸாமா பின்லாடன் ஆப்கானிஸ்தானில் தலிபான் அதிகாரிகளால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக லண்டனில் வெளியாகும் அரபு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தெற்கு ஆப்கானிஸ்தானில் கண்டகர் பகுதியில் ஓர் இடத்தில் அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாகவும்—

செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கை எதனையும் வெளியிடக் கூடாது என அவருக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் பின்லாடனுக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

# புதிய பிரதமர் பிறிமகோவ்!

மொஸ்கோ, (ரோய்ட்டர்)

**ரஷ்யாவின் புதிய பிரதமராக வெளிவிவகார அமைச்சர் ஜெவ்கெனி பிறிமகோவ் (வயது 68) நியமிக்கப்பட்டுள்ளார். அவரது நியமனத்தை ரஷ்ய நாடாளுமன்றத்தின் கீழ்ச் சபையான 'டுமா' அங்கீகரித்துள்ளது.**

**கடந்த மூன்று வாரகாலமாக ரஷ்யாவில் நீடித்து வந்த அரசியல் ஸ்திரமற்றநிலை இதன் மூலம் முடிவுக்கு வந்துள்ளது.**

450 ஆசனங்களைக் கொண்ட டுமாவில்குறைந்தது 226 பேரின் வாக்குகள் தேவையாக இருந்த நிலையில் பிறிமகோவிற்கு ஆதரவாக 317 பெரும்பான்மை வாக்குகள் கிடைத்தன. 63 பேர் எதிர்த்து வாக்களித்தனர். 15 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

போல்ஷிவிக் புரட்சிக்குப் பின் ரஷ்யா மிக மோசமான பொருளாதார, அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்துள்ள தருணத்தில் பிறிமகோவ் பிரதமர் பதவியை ஏற்றுள்ளார். அவரது நியமனத்தை அமெரிக்கா, இத்தாலி, ஜேர்மனி உட்பட பலநாடுகள் வரவேற்றுள்ளன.

அதிபர் யெல்ட்சினுக்கும் அவருக்கு எதிரான கம்யூனிஸ்டுகளுக்கும் இடையே நீடித்து வந்த இழுபறி நிலையும் இந்த நியமனத்துடன் தணிந்துள்ளது.

அதிபர் யெல்ட்சினால் இடைக்காலப் பிரதமராக நியமிக்கப்பட்ட விக்ரர் செர்நோமைடினின் நியமனத்தை இருதடவைகள் டுமா நிராகரித்ததைத் தொடர்ந்து அரசியல் நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்தது.

(ஐ-ரீ)

## சடலங்கள் மீட்பு!

இஸ்லாமாபாத், செப். 13

தலிபான் போராளிகளிடம் சிக்கிய ஈரானிய ராஜதந்திரிகளில் ஒன்பதுபேரும்கொலை செய்யப்பட்டிருப்பதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஆப்கானிஸ்தானின் முக்கிய வடபகுதி நகரமான மஷார்ஷெரீப்பை தலிபான்கள் கைப்பற்றிய போது இந்த ஈரானிய ராஜதந்திரிகள் அவர்களிடம் சிக்கினர். இவர்களது உடல்கள் நகரின் ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## புஸ்பநாதன் றமணன்

(உரும்பிராய் வடக்கு)

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பநாதன் றமணன் 11-09-98 வெள்ளியன்று காலமானார்.

இவர் வீரசிங்கம் புஸ்பநாதன் (ராசா), புஸ்பநாதன் சற்குணதேவி தம்பதிகளின் அன்பு மகனும், அகிலன் (இலண்டன்), பிரதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 12-09-98 சனிக்கிழமையன்று பிற்பகல் மூன்று மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்;
வீ. புஸ்பாகரன் (வெள்ளை)
(சிறிய தகப்பன்)

இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு.

(59156)

---

திருமதி

## இராணி பத்மாவதி ஸ்ரீ காந்தன்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், கண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராணி பத்மாவதி ஸ்ரீகாந்தன் 09 - 09 - 1998 இல் கண்டியில் காலமாகி விட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற விவசாய திணைக்கள அதிகாரி திரு. சதாசிவம் ஸ்ரீகாந்தனின் அன்பு மனைவியும், திருமதி தில்லை ராஜேஸ்வரி இராமலிங்கம், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராமலிங்கத்தின் சிரேஷ்ட மகளும், லக்ஷ்மன் (அமெரிக்கா), சீத்தா (நியூகினியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செந்தி நாதன் (அமெரிக்கா), பத்மநாதன் (எயர் சிலோன்), நல்லநாதன் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதி அனுஷி லக்ஸ்மன், திரு. செல்வராஜா ஸ்ரீகாந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஏறன், அடம், அரன், உமையான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 65/34, காட்டு ரிசேவ் வீதி, ஹந்தானா வீடமைப்புத் திட்டம் ஹந்தானா கண்டியில் 14-09-1998 நாளை திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்!
பத்மநாதன் இராமலிங்கம்

373, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(59160)

---

## பொன்னையா பத்மராஜா

(யாழ். மாநகரசபை ஆங்கில தட்டெழுத்தாளர்)

சங்கானை பிளாக்வீதியைச் சேர்ந்த பொன்னையா பத்மராஜா 11-09-98 அன்று அகால மரணமானார்.

அன்னார் ராகினியின் அன்புக் கணவரும், கவிதா (ஆசிரியை, வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி), தனுபா ஆகியோரின் அன்புத்தந்தையாரும், பொன்னையா கனகலிங்கம் (சரோஸ் சினிமா மனேஜர், கொழும்பு) அவர்களின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12-9-98) சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
திருமதி பத்மராஜா.
(மனைவி)

"பொன்னகம்",
பிளாக் வீதி, சங்கானை,

(59150)

---

## மார்க்கண்டு ஈஸ்வரன்

(மராமத்துப் பொறியியலாளர் யாழ். மாநகர சபை)

இளவாலையைப் பிறப்பிடமாகவும் நாயன்மார் கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஈஸ்வரன் 11. 09. 98 வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், இராஜநாயகியின் பாசமிகு கணவரும், சத்தியசீலன் [ஜேர்மனி], சத்தியவதனி [பிரான்ஸ்], சத்தியதர்சினி ஆகியோ அன்புத் தந்தையும் சாவித்திரி, செந்தில்நாதன், சத்தியபரன் ஆகியோரின் மாமனாரும், பிறேந்தர், அனுஷிந் ஆகியோரின் ஆசைமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 13. 09 98 ஞாயிறு காலை 9. 00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்!
ச. சத்தியபரன் (மருமகன்)

175, நாயன்மார் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(59146)

---

# தமிழ்மொழி திறன் போட்டி

யாழ்ப்பாணம், செப், 13

மூளாய் இந்து இளைஞர் மன்றம் வாணி விழாவை முன்னிட்டு சங்கானைக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடையில் தமிழ் மொழித்திறன் போட்டிகளை நடத்தவுள்ளது.

ஐந்து பிரிவுகளாக நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னதாக மூளாய் இந்து இளைஞர் மன்ற செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-4)

---

## ஆவணி ஞாயிறு...

(ஏழாம் பக்கத் தொடர்)

காலங்களை வகுத்து சூரிய பகவான் பூமியில் தனது கதிர்களைப பாய்ச்சுகிறார். இவற்றோடு சூரியபகவான் சோதிடக் கலையிலும் பிரதானஇடத்தை வகிக்கிறார். ஒருவனது ஜாதகத்தில் சூரியனின் நிலை பிதுர்காரகன் எனகூறப்படுகிறது. ஒருஜாதகனுடைய தந்தை பற்றிய நிலைகளை அறிய இந்த சூரியனைக்கொண்டுதான் அறிய முடியும் என்பதோடு அந்த ஜாதகனுடைய ஆயுட்பலம், வீரியம், இருதயபலம், துணிவு அவனுக்கு ஏற்படக்கூடிய இடமாற்றம், நோய்கள் முதலானவற்றையும் சூரியனது நிலையின் மூலம் தான் அறிய முடிகிறது.

சூரிய வழிபாடு

நாளாந்தம் நாம் சூரியனை வழிபாடாற்ற வேண்டும். சிறப்பாக இரு பொழுதுகள் சந்திக்கின்ற அதாவது சஞ்சலமற்ற நேரமாகக் கருதப்படும் பின் இரவும் முற்பகலும் சந்திக்கின்ற அதிகாலையிலும், முற்பகலும் பிற்பகலும் சந்திக்கின்ற நண்பகலிலும், பிற்பகலும் முன் இரவும் சந்திக்கின்ற மாலையிலும் சூரியவழிபாடு ஆற்றுவது சிறப்புடையதாகும். இதனை அந்தணர்கள் சந்தியாவந்தனமாக சிறப்பிக்கின்றனர். நாளாந்தம் வழிபட இயலாதவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலாவது வழிபடுதல் வேண்டும். அதுவும் இயலாதவர்கள் சிங்கராசியில் சூரியன் சஞ்சரிக்கின்ற— மகிழ்ச்சி நிறைந்த காலமாகவும், தொழில் நிறைந்த காலமாகவும் கருதப்படும் — ஆவணி மாதத்தில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் சூரியனை வழிபடுதல் சிறப்பும் பயனுடையதுமாகும். ஏனெனில் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு ராசிகளில் சூரியன் சஞ்சரித்து வருகின்றார். அந்த வகையில் ஆவணி மாதத்தில் தனது ஆட்சி வீடான சிம்ம ராசிக்கு வருவதனால் இக்காலம் சூரிய வழிபாட்டிற்கு போற்றுவதற்குரியதாகக் கொள்ளப்படுகிறது.

சூரியனை நோக்கி ஆவணி ஞாயிறுகளில் விரதமிருக்க, அதிகாலையில் எழுந்து ஸ்நானம், சந்தியா அனுஷ்டானங்களைநிறைவுசெய்து, சூரிய பகவானுக்கு வட்ட வடிவான ஆசனத்தினை முற்றத்தில் கோலமாக இட்டு சர்க்கரை பொங்கல் பொங்கி நிவேதித்து வழிபடுதல் சிறப்பாகும். அத்தோடு சிவாலயங்களுக்குச் சென்று சூரியனை மகிழ்விக்க சிவப்பு ஆடை அணிந்தும் செந்தாமரைப்பூவினால் அர்ச்சித்தும் சூரியனின் அதிதேவதையான சிவனை வில்வத்தினால் அர்ச்சித்தும் வழிபடுவதனால் தூய்மையான மனதினையும் திடகாத்திரமான உடலையும் பெறலாம். சூரிய வழிபாடு கண், உஷ்ண சம்பந்தமான நோய்களிலிருந்து விடுபடவும் சுகபோக பெரு [illegible]

---

# வல்லை முனியப்பர் ஆலயம் புனரமைப்பு

வடமராட்சி, செப். 13

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது வெகுவாக சேதமடைந்த வல்லை முனியப்பர் கோயில் இரண்டு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இப்புனரமைப்புப் பணிக்கென பன்முகப்படுத்தப்பட்ட வாவு செலவுத்திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விரைவில் இக்கோயில் புனரமைப்புப் பணி ஆரம்பமாகும் என கரவெட்டி பிரதேசசெயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்தார். (ஐ-178)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சக மாணவி ப. மயூரதி
அவர்களின் அன்புத் தந்தை

## சு. பத்மநாதன்

(உதவி ஆணையாளர், யாழ். மாநகர சபை)

அவர்களின் அகால மரணத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மாணவர்கள் (கலைப் பிரிவு)
விரிவுரையாளர்கள்.
பட்டப்படிப்புகள் கல்லூரி
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(59164)

---


# சுவிஸ் விருந்தகம் உங்களை அழைக்கிறது

சகல விதமான உணவு வகைகளையும்
உடனடியாகவும் ஓடர் செய்தும் பெற்றுக் கொள்ள
இன்றே நாடவேண்டிய இடம்

## சுவிஸ் விருந்தகம்

இல. 352, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (59168)


---

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் பத்மநாதன்

(நிர்வாக உத்தியோகத்தர், யாழ் மாநகர சபை)

11-09-98 அன்று அகாலமரணமடைந்த
சுப்பிரமணியம் பத்மநாதனின்
இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர்
அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி பத்மநாதன்
(மனைவி)

59, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(59153)

---

## பொன்னுத்துரை சிவபாலன்

(யாழ். நகர பிதா)

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். நகர முதல்வரும் சட்டத்தரணியுமான பொன்னுத்துரை சிவபாலன் 11. 9. 98 இல் அகால மரணமானார்.

அன்னார் காலஞ் சென்ற பொன்னுத்துரை தனலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் சுசிலாதேவியின் பெறாமகனும் காலஞ் சென்ற சங்கானை நாகராசா (அப்பாவா) ஆச்சிபபிள்ளை ஆகியோரின் மூத்த மருமகனும் தவமலர் (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை, நேசமலர் (திருகோணமலை) செல்வமலர் (பிரான்ஸ்) சிவமலர் (திருகோணமலை), சிவக்குமார் (பேராதனைப் பல்கலைக்கழகமாணவன்), காலஞ் சென்றகிருஷ்ணகுமார், தனவாணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மல்லிகாதேவி, புவனேந்திரன் (திருகோணமலை A, O) நடராசா (பிரான்ஸ்), கணேஸ் (ஹொலண்ட்) பரமசிவம்லோகராசா(சோதி), குகனேசராசா)(பிரான்ஸ்), கணேசமூர்த்தி (திருகோணமலை), அராலி தனபாலசிங்கம் (துரை) காலஞ் சென்ற இரத்தினசாமி (பூ), பரமேஸ்வரன் (திருகோணமலை), வடலியடைப்பு ஸ்ரீதரன் (சாமி), செல்வமலர் (கிளி), உதயசூரியன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனருமவைத்திய கலாநிதி ஸ்ரீ. கணநாதன் (குருநாதன் வைத்தியசாலை, சங்கானை— ஆனைக்கோட்டை) அவர்களின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (14. 9. 98) காலை 10. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மாமி, நாகராசா, ஆச்சிப்பிள்ளை,
மைத்துனர்கள்,
சகலன் வைத்தியகலாநிதி
குருநாதன் ஸ்ரீகணநாதன்.

சிவகுமாரன் பவனம்,
பொன்னாலை வீதி,
சித்தன்கேணி.

(59145)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமரரான மேயர் பொன்.சிவபாலன் கட்சியின் விசுவாசம் மிகு தொண்டர்

## தமிழர் விடுதலைக் கூட்டணி அனுதாபம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாநகரசபையில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்த மேயர் பொன். சிவபாலன் தமிழர்விடுதலைக் கூட்டணியின் விசுவாசமான தொண்டர்; அவரது இழப்பு ஈடு செய்யமுடியாதது.

தமிழர்விடுதலைக்கூட்டணி நேற்று விடுத்த அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது—

யாழ். மாநகர சபை மேயர் அலுவலகத்தில் மேயர் சிவபாலனும் மற்றும் ஏனையோரும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டமைக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

முன்னாள் மேயர் திருமதி சறோஜினிதேவி யோகேஸ்வரன் கடந்த மேமாதம் படுகொலை செய்யப்பட்டதை யடுத்து, மக்களின் ஜனநாயகத்தின் தேவையை உணர்ந்து முன்வந்து இந்தப் பதவியை அவர் ஏற்றார். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் மேயர் பதவியை ஏற்க அவர் முன்வந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நீண்டகால விசுவாசமான தொண்டரான சிவபாலனின் மறைவு எமக்கு பெரும் இழப்பாகும்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

## மிஷன் சுவாமிகளுக்கு கல்லூரிகள் வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 13

ஆறு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருந்த இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகள் குழுவினருக்கு யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் கடந்த வியாழனன்று பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

யாழ். மத்திய கல்லூரிக்கு வருகை தந்த சுவாமிகள் குழுவினர் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக் கட்டடத்தின் முன் புறத்திலிருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வீதியின் இரு பக்கங்களிலும் மாணவர்கள், ஆசிரியர்கள் அணிவகுத்துநின்று சுவாமிகள் குழுவினரை மலர் தூவி, மாலை அணிவித்து வரவேற்றனர். இதே வேளை சுவாமிகள் செல்லும் வீதியில் நிலபாவாடையும் விரிக்கப்பட்டிருந்தது.

பின்னர் மத்திய கல்லூரியின் ஆசிரியர் அறையில் சுவாமி விவேகானந்தரினது படமும், பகவத்கீதையின் உபதேசக் காட்சியைச் சித்திரிக்கும் படமும் ஸ்ரீமத்சுவாமி விருபாக்ஷானந்தாஜியினால் திறந்து வைக்கப்பட்டன.

தொடர்ந்து கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் சுவாமிகள் குழுவினரின் அருளுரைகள் இடம்பெற்றன.

வேம்படி மகளிர் கல்லூரிக்கு வருகைதந்த சுவாமிகள் குழுவினர் வேம்படி வீதியும்—முதலாம் குறுக்குத்தெருவும் சந்திக்கும் சந்தியில் இருந்து பாண்ட்வாத்தியங்கள் சகிதம் கல்லூரிக்கு அழைத்துவரப் பட்டனர்.

கல்லூரி மாணவிகளும், ஆசிரியைகளும் வீதியில் இரு பக்கங்களிலும் நின்று மலர் தூவி சுவாமிகள் குழுவினரை வரவேற்றனர்.

கல்லூரி வாசலில் தமிழ்—பண்பாட்டு அடிப்படையில் ஆராத்தி எடுத்து சுவாமிகள் வரவேற்கப்பட்டனர்.

பின்னர் கல்லூரியின் மேபிள் தம்பையா மண்டபத்தில் சுவாமிகளின் அருளுரை இடம்பெற்றது.

இதேவேளைசுவாமிகள் குழுவினர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி, வயாவிளான் மத்தியமகாவித்தியாலயம் மற்றும் உரும்பிராய் இந்துக்கல்லூரி ஆகியவற்றுக்கும் விஜயம் செய்தனர். அங்கும் சுவாமிகள் குழுவினருக்கு சமய பூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

(இ-7)

## விளையாட்டு விழா

சுன்னாகம், செப். 13

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் பாலர் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. தற்பரானந்தனும் கலந்து கொள்வார்கள்.

(ஐ-27)

## இறுதியாட்டமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 13

புத்தூர் கலையகம் சனசமூக நிலையம் மற்றும் வீனஸ் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவை யொட்டி நடைபெற்ற மாவட்ட மட்ட வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட இறுதியாட்டமும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை கழக மைதானத்தில் வே. இளையகுட்டி தலைமையில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் கே. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ஐ-ரீ)

## ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு மடு செல்லவே அரசு அனுமதித்தது; புலிகளைச் சந்திப்பதற்கு அல்ல!

### கல்வி அமைச்சர் பத்திரான தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

"ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனாவை மடுத் திருப்பதிக்குச் சென்று வரவே அரசு அனுமதி கொடுத்தது; விடுதலைப் புலிகள் பிரமுகர் தமிழ்ச்செல்வனைச் சந்திக்க அல்ல" என்று கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.க. செயலாளருமான காமினி அத்துக்கோரளவின் உரைக்குப் பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

காமினி அத்துக் கோரள பேசுகையில் கூறியதாவது:-

எமது உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா மடுவுக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றே சென்றார், இது தவறான செயல் என அரசு கூற முயல்கின்றது.

அவர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்தார் என்பதை நாம் ஏற்கவில்லை. எனினும் அவ்வாறு சந்தித்திருந்தாலும் அதில் என்ன பிழை உள்ளது?

1984ஆம் ஆண்டு இன்றைய ஜனாதிபதியும் மறைந்த அவரது கணவனும் பிரபாகரனைச்சந்திக்கவில்லையா? என்று கேள்வி எழுப்பினார்.

அது மறைமுகமாக மேற்கொள்ளப்படவில்லை. பொதுமக்கள் அறியவே மேற்கொள்ளப்பட்டது என்றார் பத்திரான.

(ஐ-3-9)

## அகதிகளை நோக்கி துப்பாக்கி வேட்டு

யாழ்ப்பாணம், செப். 13

வன்னிப் பகுதியில் இருந்து யாழ். கடலேரியூடாக யாழ்ப்பாணம் வந்தவர்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பெண் காயமடைந்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் வளலாயைச் சேர்ந்த இன்னத்துரை சரஸ்வதி (வயது 42) என்பவரே காயமடைந்தார். அவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

சூட்டுச் சம்பவம் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

பூநகரிப் பகுதி கடற்கரையிலிருந்து கடந்தவெள்ளியன்று இரவு படகில் புறப்பட்டு வந்தோம். அதிகாலையானதும் கடற்பகுதியில் எம்மை இறக்கிவிட்டனர். ஆழம் குறைந்த தண்ணீரில் இறக்கி விடப்பட்ட நாம் திக்குத் திசை தெரியாமல் கண்ணுக்குத் தெரிந்த ஒரு கரையை நோக்கி நடந்தோம்.

அக்கரை மண்டைதீவுக் கரை என பின்னர் அறிந்தேன்.

கரையை அடைந்துநடந்த வேளை திடீரென எம்மை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அதில் நான் மாத்திரம் காயமடைந்தேன். வேட்டுக்கள் தீர்க்கப் பட்டதும் "நாங்கள் அகதிகள்" எனக் கூக்குரலிட்டோம். அப்போது துப்பாக்கிச் சூடு நிறுத்தப்பட்டது. எம்மை நோக்கிப் படையினர் வந்தனர். பின்னர் அவர்கள் எம்மை விசாரித்து விட்டு என்னை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர் — என்றார்.

(உ-15)

## வாசகர் திருமுகம்

### பட்டதாரியின் கடிதத்துக்கு முன்னாள் தலைவர் விளக்கம்

30—08—98 இல் உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகப் பகுதியில் "பாரபட்சம் ஏன்" என்ற தலையங்கத்தின் கீழ் மீசாலை கிழக்கு, மீசாலை என்ற இடத்தைச் சேர்ந்த பெயர் குறிப்பிடாத வேலையற்ற பட்டதாரி, யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் பற்றி எழுதிய கடிதம் எமது நிர்வாகத்தின் காலப் பகுதிக்குரியதாக எழுதப்பட்டிருப்பதால் அதற்குப் பதிலளிக்க வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு.

வேலையற்ற பட்டதாரி உண்மைக்குப் புறம்பான செய்திகளை எழுதி சங்கத்தை வழி நடத்தியவர்களுக்கு மனவேதனையை ஏற்படுத்தியுள்ளார். உண்மையில் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஒருபோதும் கூட்டுறவுத்துறையில் எந்த நியமனங்களுக்கும் பெயர்களை வழங்கவில்லை என்பதை நாம் முதலில் தெரியப்படுத்துகின்றோம்.

மாறாக, வடபகுதி புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையின் உதவியுடன் நுகர்வோர் நலன் காக்கும் பணியில் சிலரை நியமிக்கும் பொருட்டு யாழ். அரச அதிபரின் அனுசரணையுடன் செயலக அதிகாரியினால் 98ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆறு பேரின் பெயர் விவரங்கள் எம்மிடம் கேட்கப்பட்டது. இவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்கள் ஆண்களாக மட்டும் இருப்பதோடு, யாழ். நகரை அண்மித்து வசிப்பவர்களாகவும் இருக்க வேண்டும். அத்துடன் இந் நியமனமானது எக்காலத்திலும் நிரந்தரத்திற்குரியதல்ல எனவும், ஆறு மாதங்கள் மட்டுமே இப் பணி மேற்கொள்ளப்படுமெனவும், இதற்கான கொடுப்பனவை "நான்" அமைப்பே வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் எமது சங்கம் யாழ். நகரை அண்மித்து இருக்க வேண்டும் என்ற நிபந்தனையை நீக்கிவிட்டு வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என்ற பிரதேச ரீதியில் குடும்பநிலை, வயது என்ற அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட ஆறு பேரின் பெயர் விவரங்களை வழங்கியிருந்தது. இவர்களின் தெரிவுபற்றி பெப்ரவரி,98 இல் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடந்த சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்திலும் பகிரங்கமாகத் தெரியப்படுத்தியிருந்தோம். நாம் வழங்கிய ஆறுபேரில் ஐவரை யாழ். செயலகம் தெரிவு செய்தது. இந்த ஐவரில் ஒருவர் மட்டுமே சங்க நிர்வாக சபை உறுப்பினர். ஆனால் "அந்த வேலையற்ற பட்டதாரி" சங்கம் தனது நிர்வாக உறுப்பினர்களின் பெயர்களையே பரிந்துரை செய்தது என்று அப்பட்டமான பொய்யைக் கூறியுள்ளார்.

நிர்வாக சபை உறுப்பினர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்பவர்கள் அல்லர் என்பதே அந்த வேலையற்ற பட்டதாரியின் கருத்தா?

மேலும் நுகர்வோர் நலன் காக்கும் பணியில் யாழ். செயலகம் தனது பட்டியலில் இருந்து மூவரைத் தெரிவு செய்தது. இதற்கும் யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இத் தெரிவுகள் இடம்பெற்றபோது ஆசிரியர் நியமனம் வழங்கும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இந் நியமனத்தில் இருந்து ஆசிரியர் நியமனத்திற்குச் சென்றவர்களின் இடத்திற்கு வேலையற்ற பட்டதாரிகளை நியமிக்குமாறு 07—08—98 இல் அரச அதிபரைச் சந்தித்து நாம் கேட்டிருந்தோம். அதற்கு, இவர்களுக்கான சம்பளத்தை "நான்" எப்போதோ நிறுத்திவிட்டதாகவும், அரச அதிபருக்கான நிதியில இருந்தே சம்பளம் வழங்கப்பட்டதாகவும், தற்போது கடமையாற்றும் இருவரையும் விரைவில் வேலையில் இருந்து நிறுத்தவேண்டி வரும் எனவும் குறிப்பிட்டார்.

நிலைமை இப்படியிருக்க, குறித்த நியமனங்களை வீணடித்து விட்டதாக அந்த வேலையற்ற பட்டதாரி எழுதியுள்ளார். மேற்படி நியமனத்தில் அவருக்கு சந்தேகம் ஏற்பட்டிருந்தால் சங்கத்திடம் கேட்டிருக்கலாம் அல்லது அரச அதிபரிடம் நேரில் கேட்டறிந்திருக்கலாம். இதை விடுத்து, வடக்கு—கிழக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினையை முதலில் சங்கம் அமைத்து முதலில் வெளிப்படுத்தி ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் கிடைக்க (யாழ். மாவட்டத்தில் 470 ஆசிரியர் நியமனம்) வழி வகுத்தவர்களுக்கு, பொறுப்பற்ற அந்தப் பட்டதாரி எழுதிய வார்த்தைகளை வடிவங்களை எண்ணும் போது நெஞ்சம் கனக்கவே செய்யும்.

எம்மால் மேல் தரப்பட்ட விவரங்களில் பிழையிருந்தால் அதனை குறித்த வேலையற்ற பட்டதாரி எப்பொழுதும் நிரூபித்துக் காட்டலாம். அத்துடன் சங்கம் கூட்டுறவுத்துறைக்கோ அல்லது வேறு எந்தத் துறைக்கோ எவரின் பெயர் விவரங்களையும் எமது காலப்பகுதியில் வழங்கவில்லை என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

ந. விஜயசுந்தரம்
(முன்னாள் தலைவர்)

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்,
யாழ். மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். கஸ்தூரியார் வீதி

**அஞ்சனந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னையின் வருடாந்தத் திருவிழா**

16-09-98 முதல் திருப்பலி
தினமும் மாலை 5 மணிக்கு
19-09-98 நற்கருணைத் திருவிழா
மாலை 5 மணிக்கு
20-09-98 ஞாயிறு திருநாள் திருப்பலி
காலை 7 மணிக்கு (புதிய நேரப்படி)

பங்குத் தந்தை,
யா/நாவாந்துறை.

அன்னை செய்த நன்மைகளுக்காக நன்றியுடன்
S. சிவானந்தன் குடும்பத்தினர்,
பேரின்பநாயகம் லேன்,
சுண்டுக்குளி.

(59100)

**CHRISTIAN REVIVAL CRUSADE**

அரிய சந்தர்ப்பம்! தவறவிடாதீர்!!

**முழுநேர கிறிஸ்தவ ஊழியர்களுக்கான கருத்தரங்கு**

நாள்: 98 புரட்டாதி 17 முதல் 19 வரை.
(3 நாள்கள்— வியாழன், வெள்ளி, சனி)
நேரம்: காலை 9.30 முதல் 1.30 வரை
(புதிய நேரம்)
இடம்: சீயோன் தேவாலயம்
24, இராமையா செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பேச்சாளர்:
வண. L.B. சில்வர்பக்
(பப்புவா நியூகினியா C.R.C. சபை
தலைமைப் போதகர்)

பங்குபெறத் தகைமை வாய்ந்தவர்கள்!
முழு நேர கிறிஸ்தவ பணியில் ஈடுபடும் ஆண், பெண் இருபாலாரும்.
சபையுடன் இணைந்து ஊழியம் செய்வோரின் பெயர்ப்பட்டியலைத் தலைமைப் போதகரும், தனிப்பட்ட ஊழியர்கள் நேரடியாகவும் 15-09-98 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
போதகர்,
சீயோன் தேவாலயம்,
29, ஆசீர்வாதம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

"அனுபவமிக்க முதிர்ந்த ஊழியரின் அருளுரைகளும் ஆலோசனைகளும் உங்கள் அன்றாட கிறிஸ்தவ பணிக்கு உரமாகும்."

போதகர்
சீயோன் தேவாலயம்,
யாழ்ப்பாணம்.

(58834)


**நான்காண்டு நினைவலையில்**



தோற்றம் 22 - 02 - 1946
மறைவு 29 - 08 - 1994

குரும்பசிட்டி
**திருமதி விக்கினேஸ்வரி கனகசுந்தரம்**
திதி: 13-09-98

இற்றை நாள் நான்காண்டின் நினைவினிலே - நின் பற்றைப் பாசத்தைப் பிரிந்த துயராறாது நிற்கும் நின் நாயகன், சோதரிகள், மைத்துனர்கள் மற்று நின் பெறாமக்கள் பிரார்த்தனைகள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செ. கனகசுந்தரம் (கணவர்)
68, மருதடி வீதி,
நல்லூர். (59148)

## கலைவிழா நடத்த ஏற்பாடு

வடமராட்சி, செப். 13

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு பாலர் பாடசாலை ஆசிரியர்களின் கலைவிழா இம் மாத இறுதியில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் குழந்தை மையக்கல்வித் திட்டங்கள் முக்கிய இடத்தைப் பெறும்.

(ஐ-173)

## வரணியில் இலவச சிகிச்சை முகாம்

தென்மராட்சி, செப். 13

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் வரணிப் பகுதியில் உள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கான இலவச மருத்துவ சிகிச்சை முகாமினை எதிர் வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00மணி முதல் வரணி மகாவித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

சிகிச்சை முகாமில் கண், நீரிழிவு, தொழுநோய், வாய்ப்புற்று, இரத்த அழுத்தம், பொது மருத்துவம் ஆகியவற்றுக்கான பரிசோதனைகள் நடத்தப்படும்.

இதில் கலந்து கொள்ளவுள்ள மக்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்தார்.

(ஐ-117)

## சர்வதேச சிறுவர் தின நிகழ்ச்சிகள்

வலிகாமம் தெற்கு, செப். 13

யாழ். மாவட்ட சிறுவர் உரிமை பாதுகாப்புக் குழுவினர், அரசாங்க அதிபர், பிரதேச செயலர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் ஒத்துழைப்புடன் சர்வதேச சிறுவர் தினக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

இது தொடர்பாக பாடசாலை மாணவரிடையே கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகள் நடைபெற உள்ளன.

கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு மாவட்ட விழாவில் பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

(ஐ-152)

## உழவு இயந்திரம் கொள்வனவு

வடமராட்சி, செப். 13

வல்வெட்டித்துறை நகரப் பகுதியில் குப்பை கூளங்களை அப்புறப்படுத்தவென உழவு இயந்திரம் ஒன்று சுமார் 10 இலட்சம் ரூபா செலவில் கொள்வனவு செய்யப்படவுள்ளது. வல்வெட்டித்துறை நகரசபை இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(ஐ-173)


SPOKEN ENGLISH by: BRITTO

கொக்குவில்
(ஞான பண்டித வித்தியாசாலை அருகில்)
புதிய பிரிவு ஆரம்பம்:
14-09-98 திங்கள்

[சி/4840]

**யாழ். விவசாயிகளுக்கு ஒரு நற்செய்தி!**
**விதை உருளைக்கிழங்கு விநியோகம்**

யாழ். மண்ணில் அமோக விளைச்சலைத் தரும்
'டிசிறி'
இன விதை உருளைக்கிழங்கை விற்பனை செய்யவுள்ளோம்.
50 கி. கி. பெட்டியின் விலை ரூபா 2,425. ஒவ்வொரு 20 பெட்டி மொத்தமாகக் கொள்வனவு செய்வோருக்கு 02 பெட்டி புதிய இன விதை உருளைக்கிழங்கு இலவசமாக வழங்கப்படும்.
இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உங்கள் தேவைகளுக்கு எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

M. L. & Co.
Managed by
E. B. FOODS (Pvt.) LTD.
235, HOSPITAL ROAD,
JAFFNA.

T. P. No. 2506 (59061)

'எம்கடன் பணிசெய்தல்'
உடுவில்
**இந்து இளைஞர் மன்றம்**
**பாலர் விளையாட்டு விழா 1998**

காலம்: 13-09-1998 ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 1-30 மணி (புதிய நேரம்)
இடம்: யா/ உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்
பிரதம விருந்தினர்: உயர்திரு. T. V. இருஷ்ணசாமி
(யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)
சிறப்பு விருந்தினர்: உயர்திரு. அ. தற்பரானந்தன் J. P.
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- மன்றத்தினர்

விழா சிறக்க வாழ்த்துவோர்:
வீடியோ துறையில் தனித்துவம் வாய்ந்த
**தர்ஷி வீடியோ கொம்பிளெக்ஸ்**
டச் வீதி, உடுவில்.
(59147)

**கூறுவிலை கோரல்**
gtz
**ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்**
(ஜீ. ரி. இசற்)
யாழ்ப்பாண மீள் நிர்மாணத் திட்டம்
**சேதமடைந்த வீடுகள் புனரமைப்புக்கான பொருள்கள் விநியோகம்**

எமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் மேற்கூறிய புனரமைப்பு வேலைகளுக்குத் தேவையான கட்டடப்பொருள்கள் பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

தேவைப்படும் பொருள்கள், விநியோக நடைமுறைகள், வழங்குநர்கள் பேணப்படவேண்டிய கடப்பாடுகள் ஏனைய விபரங்கள் அலுவலக நேரங்களில் கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். (கூறு விலைகள் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் 30-09-1998 புதன் கிழமை நண்பகல் 12-30 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகச் சமர்ப்பித்தல் வேண்டும்).

பொதுவாகத் தேவைப்படும் பொருள்கள்
01) சீமெந்து
02) கிறசர் கற்கள்
03) மணல்
04) இரும்புக்கம்பிகள்
05) மரவகைகள்
06) பெயின்ற் வகைகள்
07) ஓடுகள்
08) பூட்டு பிணைச்சல் வகைகள்

திட்ட முகாமையாளர்,
ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்,
(ஜீ. ரி. இசற்)
ஜே. ஆர். பீ.,
11, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி/4850)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சாத்தியம் தெரியவில்லை

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்தார் என்று அரசாங்கம் சந்தேகிக்கிறது.

மடுவுக்கு யாத்திரை கொண்டிருந்த வேளையில் டாக்டர் ஜெயவர்த்தனா வன்னிக்கும் போய் அங்கு விடுதலைப் புலிகளுடன் பேசினார் என்பது அரச தரப்பின் குற்றச்சாட்டாக உள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட இயக்கமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதனால் அவர்களுடன் மக்கள் எவரும் தொடர்பு கொள்வதைப் பாதுகாப்புப் படையினர் குற்றமாகக் கொள்கின்றனர்.

இத்தகைய ஒரு பின்னணியில் எதிர்க்கட்சி எம்.பி ஒருவர் வன்னி சென்று விடுதலைப்புலிகள் பிரமுகர்களைச் சந்தித்து அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்வது குறித்துப் பேசியுள்ளார் என்பதே அரச தரப்பின் கண்டுபிடிப்பாக உள்ளது; குற்றச்சாட்டாக உள்ளது.

ஆனால் அரசாங்கத் தரப்பின் குற்றச்சாட்டை டாக்டர் ஜயலத் மறுத்திருக்கிறார். சி.ஐ.டி பொலீஸார் தம்மை விசாரித்த போது, தாம் மடுவுக்கு யாத்திரிகராக சென்றாரே அன்றி விடுதலைப் புலிகளைச் சந்திக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

அவசரகாலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீது நாடாளுமன்றத்தில் பேசும் போது விடுதலைப் புலிகளைச் சந்தித்ததை நிரூபிக்குமாறும் அரசாங்கத்துக்குச் சவால் விடுத்திருக்கிறார்.

இந்தச் சர்ச்சையைப் பெரிதாக்கி நீடித்து அரசியல் இலாபம்தேடுவது அரசாங்கத் தரப்பின் நோக்கமாக இருக்கலாம். அதனால் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் டாக்டர் ஜயலத் விவகாரம் குறித்து அரச எம்.பிக்கள் 'கொதித்துஎழுந்தார்கள்'!

ஆனால் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் டாக்டர் ஜயலத் விவகாரம் குறித்துக் கூறுகையில்;

எந்த இயக்கத்துடனும் பேசுவது சட்டவிரோதமானது அல்ல. ஆனால் சட்டத்துக்குப் புறம்பான விதத்தில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது குறித்துப் பேசுவதே சட்டவிரோதமானது என்று தெரிவித்திருக்கின்றார்.

அரசாங்கத்தைப் பொறுத்தவில் கையில் எதுவும் இல்லாமல் விடுதலைப்புலிகளுடன் எப்படிப் பேசுவது என்றும் அவர் கேட்டிருக்கிறார். ஐக்கிய தேசியக்கட்சி அரசோடு ஒத்துழைக்காவிடில் அரசு விடுதலைப் புலிகளுடன் பேசுவதில் பயனில்லை என்பது அவரது நிலைப்பாடு.

அரசும் எதிரணியும் இவ்வாறு இழுபறிப்பட்டுக் கொண்டிருப்பதை விட, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எவ்வித முன்னேற்றமும் உண்டாகும் சாத்தியம் எதுவுமே தெரியவில்லை.

# வாழமுடியும் என்ற நம்பிக்கையை மக்களுக்குச் செயலால் காட்டுங்கள்!

வாழ்க்கையில் நம்பிக்கையை ஊட்டுவது ஓர் உன்னத பணியாகும்.

அந்தப் பணியை எமது சமூகத் தொடர்புகளிலும், உறவுகளிலும் நாம் எப்போதும் சிறப்பாக ஆற்ற வேண்டும்.

2000 யூபிலி ஆண்டின் இரண்டாவது ஆயத்த ஆண்டான 1998 ஆம் ஆண்டு தூய ஆவிக்கு சிறப்பாக அர்ப்பணிக்கப்பட்ட ஆண்டாகும்.

தூய ஆவியானவர் மனித இதயங்களில் நம்பிக்கையின் பாதுகாப்பாளராக விளங்குகின்றார்.

இதனால் திருத்தந்தை 2 ஆம் அருளப்பர் சின்னப்பர் தமது 32 ஆவது உலக சமூக தொடர்பு தினச் செய்தியில் "தூய ஆவியால் உயிர் ஊட்டம் பெற்று நம்பிக்கையைத் தொடர்புபடுத்துங்கள்" என்று அழைப்பு விடுத்துள்ளார்.

தூய ஆவியால் உயிர் ஊட்டம் பெற்றுள்ள இந்த நம்பிக்கையானது மனித இதயங்களில் நீண்ட தேடுதலோடு தொடர்புடையது. மனித இதயங்களில் ஏற்படும் மகிழ்ச்சிக்கான, நிறைவுக்கான, உண்மைக்கான, அமைதிக்கான, முழு மனித விடுதலைக்கான தேடுதல்களெல்லாம் இந்த நம்பிக்கையின் அடிப்படையானதே.

கிறிஸ்தவ தொடர்பாளர்கள் நம்பிக்கையை முதலில் தம் வாழ்வில் அனுபவித்தால் தான் அந் நம்பிக்கையை வெற்றிகரமாக மற்றவர்களுக்குத் தொடர்புபடுத்த முடியும்.

தொடர்பாளர்கள் 'செபத்தின் மனிதர்களாக' இருக்கின்ற போது தான் இது சாத்தியமாகும். அப்போது தான் "நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு விளக்கங் கூறும்படி யாராவது கேட்டால் தக்க விடை பகர எப்போதும் தயாராய் இருங்கள்" (1 இரா. 3:15) என்ற வசனத்தின்படி கிறிஸ்தவ தொடர்பாளர்கள் நம்பிக்கையின் செய்தியை இன்றைய கால மனிதர்களுக்கு உண்மையின் அழுத்தத்துடன் கொடுக்கக் கற்றுக் சொள்வார்கள்.

**ஞாயிறு நற்பிரசாதம்**

தொடர்பாளர்கள் மட்டுமல்ல, தொடர்பு சாதனங்கள் கூட நம்பிக்கையூட்டுவனவாகவே இன்று விளங்குகின்றன. இன்றைய நவீன உலகின் தொழில் நுட்பதல், உயர்ச்சியும், விஞ்ஞான வளர்ச்சியும் மருத்துவத் துறையின் சான்றுகளும் சமூகத் தொடர்பின் வேகமும் இந்த நம்பிக்கையைப் பிரதிபலிக்கின்றன.

நடைமுறையில் பொதுவாகத் தொடர்பாளர்கள் இயங்கும் தன்மையும், தொடர்பு சாதனங்களைஇயக்கும் விதமும் பரிசீலனை செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

உண்மையை மறைத்தல், பொய்மையை வளர்த்தல், நீதியை மறுத்தல், நியாயத்தை ஓரங்கட்டுதல், நிம்மதியைக் குறைத்தல், அமைதியை ஒழித்தல் என்பனவற்றிற்கு உழைத்தலும் துணை போதலும் தொடர்பாளர்கள் பணியல்ல.

அரசியல் பக்கச்சார்பு வியாபார இலாபநோக்கு, இலஞ்சம் பெறல், பின்விளைவுகளுக்குப் பயந்து நடுநிலைமை வகிக்காமை, பொது அபிப்பிராயத்தைத் திரித்துவிடல் என்பவையெல்லாம்விசுவாசமான தொடர்பு வலுப்பெறுவதற்கு உயிரூட்டவல்லன அல்ல.

தொடர்பு சாதனங்களை கண்மூடித்தனமாகப் பாவித்தல், முறை தவறிப் பிரயோகித்தல், மூர்க்கத்தனமாகச் செயற்படுத்தல், நெறிமுறைகளைப் பிறழவிடல்- இவைகளெல்லாம் தொடர்பு சாதனங்கள் தவறாக இயக்கப்படும் விதத்திற்கு சான்றுகளாகும்.

கிறிஸ்தவ தொடர்பாளர்கள் இயங்கும் தன்மையும், தொடர்பு சாதனங்களை இயக்கும் விதமும் நற்செய்தி மதிப்பீடுகளின் வழி அமையும் போதுதான் நம்பிக்கையூட்டும் உன்னத பணியாக அமைய முடியும்.

எமது அன்றாட அடிப்படை மனிததொடர்புகளில் எமது நல்வார்த்தையால், இனியபுன்சிரிப்பால், அரிய செயலால் இனியும் வாழ முடியும் என்ற நம்பிக்கையை போரின் மத்தியில் வாழும் எம் மக்களுக்குக் கொடுக்க முடியுமானால் நாமும் நம்பிக்கையின் உன்னத தொடர்பாளர்களே!

(நன்றி-பாதுகாவலன் ஆசிரியர் தலையங்கம் 15 5 98)

# 'ஆவணி ஞாயிறு' சிறப்பு

தன்னில் இருந்து அனைத்தையும் தோற்றுவிப்பவனாகிய சுயஒளி கொண்ட ஜோதி ரூபமான கண்கண்ட தெய்வம் சூரியபகவான். சூரியனை ஆதியில் சௌரர்கள் என்னும் பிரிவினர் வழிபட்டாலும் பிற்காலத்தில் சிவன், விநாயகர் முதலிய முதன்மை தெய்வங்களோடு அனைவராலும் வழிபாடாற்றப்பட்டு வருகின்றது.

உலக இயக்கத்திற்கு காரணமாக விளங்கும் சூரியனுக்கு இந்தியாவில் சிறப்பாக வழிபாடாற்றப்பட்டு வருகிறது குறிப்பாகதஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் வட்டத்தில் சூரிய பகவானுக்குத்தனியான ஆலயம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவில் மட்டுமல்லாது நம்நாட்டிலும் மற்றும் ஐரோப்பா, தென் அமெரிக்கா, சீனா ஆகியநாடுகளிலும் சூரியனை மக்கள் வணங்குகிறார்கள்.

நவக்கிரக நாயகர்களில் நடுநாயகமாக விளங்கும் சூரியன் சிவசூரியன், சூரிய நாராயணன் என்னும் பல பெயர்களோடு சாயாதேவி, ஸ்வர்சலாம்பா தேவிமார்களோடுகூட விளங்குகின்றான். சூரியபகவானை முன்னிறுத்தி உலக நன்மைக்காக இரவு, பகல், நாள்கள், முகூர்த்தங்கள், கிழமைகள், மாதங்கள், வருஷங்கள், ருதுக்கள் என காலங்களை வகுத்து மனிதர்கள் தமது வாழ்க்கையை வளம்படுத்தி வருகின்றனர்.

அனைத்து ஜீவராசிகளும் இன்புற்று இருக்கும் பொருட்டு வருடத்தை ஆறு பருவங்களாக வகுத்து, அந்தந்தக் காலத்தில் மக்கள் ஆற்றவேண்டிய செயற்பாடுகளும் வகுக்கப்பட்டுள்ளன.

அதில் முதலாவது காலமாக வசந்தகாலம் காணப்படுகிறது. இந்தக் காலத்தில் சித்திரை, வைகாசி மாதங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இம்மாதங்களில் கல்யாணங்கள், உற்சவங்கள் மிகுதியாக நடைபெறுகின்றன.

அடுத்து வெயில் காலமான ஆனி, ஆடி மாதங்களைக் கொண்ட கரீஷ்மருது காணப்படுகிறது.

**பிரம்மஸ்ரீ**
**சபா. வாசுதேவ சர்மா**

இக்காலத்தை அடுத்து அமைவது வர்ஷருது ஆகும். ஆவணி, புரட்டாதி மாதங்களை உள்ளடக்கிய காலம் மழை ஆரம்பமாகிறது. எனவே இதனை உழவுத் தொழில் தீவிரமாக ஆரம்பிக்கப்படுப்காலம் என சுட்டப்படுகிறது.

ஐப்பசி கார்த்திகை மாதங்களைக் கொண்ட அடுத்த காலப்பகுதியான சரத்ருது, தெளிவான, சுகமான, சுத்தமான வாழ்வுக் காலமாக சித்திரிக்கப்படுகின்றது.

அமைதியான வாழ்விற்கு ஏற்ற காலமாகவும், பனிக்காலத்தின் ஆரம்ப காலமாகவும் மார்கழி, தை மாதத்தைக்கொண்ட ஹேமந்தருதி காணப்படுகின்றது.

சிசிரருது ஆகிய மாசி, பங்குனியை உள்ளடக்கிய காலம் மிகுதியான பனிக்காலமாக அமைகின்றது. இதன்போது போர்கள் தவிர்க்கப்பட வேண்டியனவாகவும் அமைதியாக இருக்க வேண்டிய காலமாகவும் கணிக்கப்படுகிறது.

இவ்வாறு ஆறு வகையான

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

**ஆவணி - 29**

திங்கட்கிழமை

திதி: நவமி
முன்இரவு 10.17 வரை.

நட்சத்திரம்: மிருகசீரிடம்
காலை 07.02 வரை.

சுபநேரம்: 12.03 - 01.33

ராகுகாலம்: 07.33 - 09.0

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

எங்கு அன்பு முடிகிறதோ அங்கு கொடுங்கோலாட்சி ஆரம்பமாகிறது.

—வில்லியம்பிட்

# எதிரொலி :-

● நிவாரண வெட்டால் பாதிக்கப்பட்ட ஒருவர் கிராம சேவையாளரைக் கத்தியால் குத்த முயன்றார்.

★ எய்தவர் யாரோ? வெறும் அம்பு மேல் ஏன் இந்த வம்பு?

● பிரதமர் வாஜ்பாய், வை. கோபாலசாமி ஆகியோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றனர் என்கிறார் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி,

★ அடிக்கடி இப்படி வெறும் வாயைச் சப்பிக் கொண்டிராவிட்டால், சுப்பிரமணியம் சுவாமியை எப்போதோ மறந்து விட்டிருப்பார்கள் மக்கள்!

● யாழ்ப்பாணத்தில் வரவர இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரிக்கின்றன.

★ பகலிலே தி(தெ)ருவாளர்களாக இருப்பவர்கள்தான் இரவிலே திருட்டாளர்களாக மறுபிறவி எடுக்கிறார்களோ?

● மொனீக்காவுடனான தொடர்பைப் பற்றிக்குறிப்பிட்டு முதன் முதலாக "சொறி" என்று மக்களின் பிரதிநிதிகளிடம் சொல்லி மன்னிப்புக் கோரினார் பில் கிளின்ரன்!

★ இந்த 'சொறி', தன்னுடைய அந்தரங்க வெறி எல்லாவற்றையும் மறைத்துவிடும் என மனப்பால் குடிக்கிறாரோ?

● செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டுமாறு அரசாங்கத்தைப் பல அமைப்புக்கள் கோருகின்றன.

★ அம்மணியின் அரசுக்குச் செம்மணி ஒரு சவால்தான்!

● நாடு முழுவதற்குமான அவசரகாலம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

★ ஜனநாயகப் பல்லவியில் கேட்கும் அபசுரம் இது!

● வடக்கு — கிழக்கு மாகாண அபிவிருத்தித் திட்டப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு அரசு சுற்று நிருபமொன்றை அனுப்பியுள்ளது.

★ அந்தத் திட்டங்கள் இனி, வெறும் வட்டங்களாகப் போகின்றனவோ?

● இலங்கை இனப்பிரச்சினையில் மத்தியஸ்தம் வகிப்பதற்குத் தாம் தயார் என நெல்சன் மண்டேலா அறிவித்துள்ளார்; நிபந்தனை அற்ற பேச்சு வார்த்தைக்குத்தான் தயாரில்லை என ஜனாதிபதி சந்திரிகா குருநாகலில் கூறியுள்ளார்.

★ மத்தி — அஸ்தமனம்!

● அரசியல் வாதிகளால் மட்டும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்கிறார் அமைச்சர் பீரிஸ்.

★ 'மட்டும்' என்பதைப் பின்னே தள்ளி "தீர்வு காண மட்டும்" என்று சொல்லியிருந்தால் அதிக பொருத்தமாக இருக்குமோ?

— இடியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத குபேட்டா லான்ட்மாஸ்ரர் புதியபெட்டி கலப்பையுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ஆ. இரட்ணராஜா, 83/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. [59126]

650 சஷ்ரம் மொடல் (லான்சர்), மோட்டார் சைக்கிள், கார் றேடியோ, XRS 300 (Sony), G 300, G 7, L 150, JVC, ST 25 போன்ற டெக் வகைகள் முக்கால் குடை, முழுக்குடை, பேபிக் குடை என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. செந்தூரன், இல. 4, மேதர்லேன், மானிப்பாய். (59122)

புறொயிலர் கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு முகவரி: 101, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி அண்மையில், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (59114)

## வீடுகள் விற்பனைக்கு

யாழ். நகர்ப்புறத்தில் அடைக்கல மாதா கோயிலுக்கு அண்மையில் நல்ல நிலையில் சகல வசதிகளுடன் 3,4 அறைகளைக் கொண்ட, ஒரு வளவில் அமைந்துள்ள இரு வீடுகள் விற்பனைக்குண்டு. தனித்தனியே விற்கப்படமாட்டாது. Dr. Suraj Somasundaram. 25, Sylvester Road, Mountlavinia என்ற விலாசத்தில் தொடர்பு கொண்டு சிபார்சுக் கடிதத்துடன் செல்பவர்களுக்கு மட்டுமே வீடுகளைப் பார்வையிட அனுமதி வழங்கப்படும். T.P-No. 074-201582 வெளிநாட்டிலிருந்து தொடர்புக்கு 0094-74201582. (சி/4817)

## சோதிடம்

வெளியூர் ஜெனன ஜாதக குறிப்புஎழுத, பலன் பார்க்க சிவம் சோதிடர், இல: 158, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (59108)

## வாடகைக்கு

வீட்டுப்பகுதி (அனெக்ஸ்) வண்ணார்பண்ணையில் சிறு குடும்பத்துக்கு வாடகைக்கு உண்டு. அருட்செல்வம் மாஸ்டர், பெருமாள் கோயிலடி, கன்னாதிட்டி. (59152)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழி (Broilers) சேவல், கல்பேட்ஸ் என்பன குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தினமும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல40. கோயில் வீதி, யாழ்ப்பாணம். [59086]

இறைச்சிக்கோழி, புறொயிலர் (Broiler) கல்பேட்சேவல் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல: 141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [59142]

எல்லாவகையான இறைச்சிக் கோழிகளும் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, குறைந்த விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் பாம் சென்ரர் (நல்லூர் வீடியோ சென்ரர்), 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர். (59129)

பிறிமா புறொயிலர் (prima Broiler) இறைச்சிக்கோழி $1\frac{1}{2}$Kg இல் இருந்து $3\frac{1}{2}$Kg வரை விற்பனையாகின்றது. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சனிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். (5) 17, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [59093]

## SPOKEN ENGLISH

இலக்கணம் இன்றி சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில. புதிய பிரிவு 15—09—98 11-00 A.m. 10 மாணவர்கள் மட்டும் அனுமதி. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (59149)

## ஆங்கிலம் விசேடமாக

O/L 98 இல் Credit Distinction பெறுபேறுடைய G. A. ப. வெளிவாரி (Spoken English, B.Sc. London, Inter ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோயிலடி. சிவன் கோயில் மேற்கு வீதி. திருநெல்வேலி. (59011)

## தக்காளி நாற்று

றோமாஇன தக்காளி நாற்றுக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அறவழி போராட்டக் குழு, கைதடி, நுணாவில் சாவகச்சேரி. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் பெறலாம். (59097)

## தேவை

தரமான நல்ல நிலையில் உள்ள கோட், சூட், ரை முதலியவை தகுந்த விலைக்கு வாங்கப்படும். தொடர்புகளுக்குபா. நிர்பானந்தன், 163, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (59034)

சாப்பாட்டுக் கதிரைகளும் 10 அடி அஸ்பெஸ்டஸ் சீட்டுகளும் அல்லது பழைய தகரங்களும் தேவை. தொடர்பு: தனபாலசிங்கம், நல்லூர் வீடியோ சென்ரர் வளவு. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர். (59128)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### மகாபொல கொடுப்பனவு 1995/96, 1996/97

கலை, விஞ்ஞான, மருத்துவ பீட மாணவர்களுக்கான மகா பொலக் கொடுப்பனவுகள் (முதலாம் ஆண்டு நீங்கலாக) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் வழங்குவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. கொடுப்பனவுக்கான கால அட்டவணை பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளது.

—பதிவாளர்

(C/ 4855)

# ஐ. தே. க. யோசனைகளை ஆராயும் கூட்டம் நாளை

கொழும்பு, செப். 13 சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, சுதந்திர பொலீஸ் சேவை ஆணைக்குழு, சுதந்திர பொதுச்சேவை ஆணைக்குழு ஆகியன குறித்து ஐ. தே. க. வெளியிட்டுள்ள யோசனைகள் தொடர்பாக ஆராயும் ஆரம்ப கூட்டம் ஒன்று நாளை முற்பகல் 10 மணி முதல் இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்த ஆணைக்குழுக்கள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக்குழு அவை தொடர்பாக இப்போது ஆராய்ந்து வருவதாகவும் —

இறுதிக்கட்ட யோசனைகள் நவம்பர் மாத இறுதியில் வெளியிடப்படும் என்றும்—

ஐ. தே. க. தெரிவித்துள்ளது.

மதப்பெரியார்கள், சகல அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அமைப்புக்களுடன் இந்த விடயங்கள் தொடர்பாக ஆலோசனைகள் வரவேற்கப்படுவதாக ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளனர்.

நாளைய கூட்டத்துக்கான அழைப்பை எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார். (ஐ-3)

# பேக்கரி விற்பனைக்கு

பருத்தித்துறை நகரப்பகுதியில் சமீபத்தில் கட்டப்பட்ட ஒரு பேக்கரி காணியுடனும் உபகரணங்களுடனும் உடன் விற்பனைக்குண்டு. உடனடியாகவே பாண் உற்பத்தி தொடங்கலாம். விலை மற்றும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள்:

செ. ஜெகசோதி, 'செம்பருத்தி', தும்பளை வீதி, பருத்தித்துறை. அல்லது க. பாலசுப்பிரமணியம், இலங்கை வங்கி, பிரதேசக் காரியாலயம், யாழ்ப்பாணம்.

(59154)

துன்னாலை தெற்கு

# குடவத்தை விநாயகர் ஆலய பாலஸ்தர்பன விஞ்ஞாபனம்

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 31 ஆம் நாள் 16-09-1998 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

பூர்வாங்கக் கிரியைகள் 14-09-98 திங்கட்கிழமை இரவு 10-20 மணியளவில் ஆலயகுருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ ஆ. கணேசக்குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும்.

- தர்மகர்த்தா சபை

(சி-4803)

உ

இருபாலை கிழக்கு

# அருள்மிகு கந்தசுவாமி கோயில்

[முனி அம்பாள் கோயில்]

## சங்காபிஷேக விஞ்ஞாபனம்

மெய்யடியார்களே!

காலம்: 13-09-1998 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி தொடர்ந்து விஷேட பூசையும் இடம்பெற்று, சுவாமிவீதிவலம் வரும் காட்சியும் இடம்பெறும். நண்பகல் 12-30 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படும். அத்தருணம் அடியவர்கள் அனைவரும் வருகை தந்து பெருமானை வழிபட்டு விழாவினைச் சிறப்பித்து இறைவன் இறைவியின் பெருங்கருணையைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

- உபயகாரர்கள்

இருபாலை கிழக்கு, இருபாலை. (சி/4839)

# கண்ணீர் அஞ்சலிகள்

அகால மரணமடைந்த யாழ். மாநகர முதல்வர், யாழ். நகரத் தளபதி மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் காயமடைந்த பொதுமக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

(சி-4857)

() இல்லத்து அரசிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்
() உணவகங்களின் உரிமையாளர்களுக்கு
அரியதொரு நல் வாய்ப்பு!

# கண்ணன் மார்க் உழுத்தம் பருப்பு

என்று கேட்டு வாங்குங்கள்!

- ★ தூசுகள் குறுணிகள் நீக்கித் துப்புரவு செய்யப்பட்டது
- ★ நீரிலே இட்டவுடன் கோதுகள் எளிதில் நீங்கி விடும்
- ★ அரைத்தல் வேலையை எளிதாக்கி விடும்.

**கண்ணன் மார்க் உழுத்தம் பருப்பு**

யாழ்ப்பாணம் பஷாரில் சகல பலசரக்கு மாளிகைக் கடைகளிலும் விற்பனையாகின்றது.

ஒரு முறை வாங்கிப் பயன்படுத்தினால் மீண்டும் மீண்டும் நாடவைக்கும்.

**கண்ணன் மார்க் உழுத்தம் பருப்பு**

துப்புரவும் தரமும் வாய்ந்த உழுத்தம் மாவும் ஸ்ரீ கண்ணன் அரைக்கும் ஆலையிலே தயாரித்து விற்பனையாகின்றது.

**இன்றே வாங்குங்கள்! பயன் அடையுங்கள்!**

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலுமிருந்து மொத்தமாகவும் சில்லறையாகவும் எமது ''கண்ணன் மார்க்'' உழுத்தம் பருப்பு கொள்பவர்கள் எண்ணிக்கை நாள் தோறும் அதிகரித்து வருவதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

வருக! வாங்கிப் பயன் கொள்க!

# ஸ்ரீ கண்ணன் அரைக்கும் ஆலை

பலாலி வீதி, திருநெல்வேலி.
(சந்தைக்கு அருகில்) (59155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸ் ஜீப் விபத்தில் வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், செப். 13

பளையில் நடந்த வெள்ளியன்று பொலீஸ் ஜீப்புடன் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த நடராசா (வயது 64) என்பவரே மரணமானவராவார்.

படுகாயமடைந்த நிலையில் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அங்கு சிகிச்சைக்குட்படுத்திய சிலமணிநேரத்தில் உயிரிழந்தார்.

இவரது சடலம் உறவினரின் வருகைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-15)

மட்டுவில் தெற்கு

## மஹாவிஷ்ணு (கண்ணன்) ஆலயம்

## கிருஷ்ண ஜெயந்தி விழாவும் அலங்கார உற்சவமும்

விழாக்காலம்:- 12-09 98 முதல்
21-09-98 வரை

12-09-98 சனிக்கிழமை காலை 9 மணி
பிற்பகல் 2 மணி
கிருஷ்ணஜெயந்தி விழா

18-09-98 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி
வெண்ணெய் தேடும் விழா
(தெருவீதியுலா)

21-09-98 திங்கட்கிழமை காலை
சக்கரத் தீர்த்தம்

ஆலய பிரதம குரு:-
கல்வயல் -
சிவஸ்ரீ தீ கிருஸ்ணமூர்த்திக் குருக்கள்
(ஆசிரியர் - குருசாமி வித்தியாலயம் கைதடி)

அ. தில்லைநாயகர்.
ஆலய தர்மகர்த்தா

(சி/4858)

## இலவச கண் மற்றும் மருத்துவ முகாம்

இன்று 13-9-1998 காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 2.00 மணிவரை கோண்டாவில் மேற்கு கிராமசேவையாளர் பணிமனையில்

P. J. பெர்ணாந்து ஆதரவுடன்

இலவச கண்சிகிச்சை முகாமும் நீரிழிவுப் பரிசோதனை மற்றும் இரத்த அழுத்தப் பரிசோதனையும் நடத்தப்படும்.

தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்.
(சி/4850)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் ஆசிரியையாகப் பணியாற்றிய
செல்வி P. கவிதாவின்
தந்தையாரான

### பொன்னையா பத்மராஜா

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த மனவேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவினால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், பணியாளர்கள்
இயக்குநர்,
Institute of Informatics Studies (I. I. S.)
(சி/4860) 68, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன ஆசிரியை
செல்வி P. கவிதாவின்
அன்புத் தந்தையார்

### பொன்னையா பத்மராஜா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இயக்குநர், விரிவுரையாளர்கள்,
பணியாளர்கள்.

Jaffna College Institute of Technology
(J. C. I. T.)
(சி/4861)

# இளைஞன் மரணம்

இராணுவத்தினரால் விசாரணைக்கென கடந்த 9 ஆம் திகதி அழைத்துச் செல்லப்பட்ட ஒருவர் மூன்றாம் நாள் — 11 ஆம் திகதி— சடலமாக யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் மவுண்காமல் வீதியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரன்குணசேகரம் [வயது 26] என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். இவர் 'றெக்கோடிங்' நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தவர்.

மாடியில் இருந்து விழுந்து மரணமானதாக, சடலத்தை ஒப்படைத்த இராணுவ அதிகாரி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரண விசாரணையின் பொருட்டும், பிரேத பரிசோதனையின் பொருட்டும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. [இ-15]

## SHAMROCK

A/L Day Class
ஆரம்பம்: 16/9 Wed.
7-30 a. m.

Com. Mr பசில்
Acc Mr BALA
Econ Mr இராஜேஸ்வரன்
Stats. Mr. தவசேகர்
Tamil Mr அருள்
Log. Mr. மகிந்தன்
(சி/4862)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று முதல்
விஜயகாந்த் - ராம்கி
நிரோசா நடித்த
செந்தூரப்பூவே
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228
(59037)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா
நடித்த
முத்து
(கடைசி வாரம்)
18 ஆம் திகதி முதல்
அமைதிப்படை
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.
இன்று
சரத்குமார் (இருவேடம்)
விஜயகுமார் - குஷ்பு
மீனா, மனோரமா
கபாலி, கவுண்டமணி
நடித்த
நாட்டாமை
(சி/4778)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
கமல் (இருவேடம்)
சுகன்யா நடித்த
இந்தியன்
(ரீல்ஸ்)
(கடைசி வாரம்)
காட்சி: 10-30, 2-30
(59166)

## சிவா திரை

சிவன் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
தினசரி
10-30 — 2-30 மணி.
ராமராஜன் நடிக்கும்
அண்ணன்
(புதிய வெளியீடு)
(சி/4865)

# குண்டுத் தாக்குதலுக்கு புளொட் கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாநகரசபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்தை தமது அமைப்பு வன்மையாகக் கண்டிப்பதாக புளொட் அமைப்பின் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

'புளொட்' தலைமைச் செயலகத்தின் சார்பில் எம். பற்றிக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் பின் வீதியில் அமைந்துள்ள இந்து விடுதியில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை நடத்தப்பட்ட புலிகளின் மிலேச்சத்தனமான கோரக் குண்டுத் தாக்குதலினால், யாழ். மாநகர முதல்வர் மற்றும் இராணுவ அதிகாரிகளும், அரச ஊழியர்களும் படுகொலை செய்யப்பட்டனர். இப்படியான புனிதப் பிரதேசத்தில் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இக்கொடூரத் தாக்குதல் சம்பவத்தை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினராகிய நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்துடன் இத்தாக்குதலில் பலியான யாழ். மாநகர சபை முதல்வர் பொன். சிவபாலன் மற்றும் பொலீஸ் அதிகாரிகளான சந்திர பெரேரா, சரத் பெரேரா, மோகனதாஸ், சந்திரமோகன், நகரபிரிகேடியர் சுசந்த மெண்டிஸ், கப்டன் ராமநாயக்க மற்றும் இவர்களுடன் பலியான கட்டடக் கலைஞர் திருமதி மல்லிகா இராஜரட்ணம், தட்டெழுத்தாளர் பத்மராஜா, பொறியியலாளர் ஈஸ்வரன், மாநகரசபை நிர்வாக அதிகாரி பத்மநாதன், பொலீஸ் கான்ஸ்டபிள் ஜெராட் ஆகியோரின் குடும்பத்தினருக்கு எமது தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம் — இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# மட்டக்களப்பு மாநகர மேயர் கண்டன அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 13

தமிழ் மக்கள் மீதும், தமிழ் மண் மீதும் மிகுந்த அன்பு கொண்டவரும், ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், தமிழ் மக்களின் நலனில அக்கறையும் கொண்ட யாழ். மேயரின் படுகொலை கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மட்டக்களப்பு மாநகர மேயர் செழியன் ஜே. பேரின்பநாயகம் யாழ். மேயரின் மரணம் தொடர்பாக விடுத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையில் ஏற்பட்ட அனர்த்தமான விளைவு மனதை உருக்குவதாக உள்ளது. போரின் அரக்கப் பிடியில் இருந்து நாம் எப்போது மீள்வோம் என்று தெரியாத நிலையில் உள்ளோம். இந்த முடிவில்லாப் போரினால் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக நாம் இருக்கின்றோம். கொழுந்து விட்டெரியும் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும், எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## பெண் காயம்

பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வளலாய் பகுதியில் கடந்த வியாழன் இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

சின்னத்துரை சரஸ்வதி (42 வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார்.

## மரண அறிவித்தல்

### வீரகத்தி மாணிக்கவாசகர்

நுணாவில் மேற்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அதிபர் வீரகத்தி மாணிக்கவாசகர் 12.09.1998 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியை இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மருந்தாளர் மகேஸ்வரன், பத்மாவதி, திலகவதி, காலஞ்சென்ற தொழில்நுட்பவியலாளர் கதிர்காமநாதன், காலஞ்சென்ற கருணாகரன், வள்ளிநாயகி (சுவீடன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், றங்கநாயகி, சிவசோதி (அதிபர் யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம்), ச. நடேசபிள்ளை [ஓய்வுபெற்ற அதிபர்], செல்வராணி, [லண்டன்] திலசை வீரசிங்கம் [சுவீடன்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 13.09.1998 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் காந்தாளம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
ச. நடேசபிள்ளை
[மருமகன்]

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
[59169]

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி மல்லிகாதேவி இராஜரட்ணம்

(கட்டடக்கலைஞர் மாநகர சபை)

11-09-98 அன்று அகாலமரணமடைந்த திருமதி மல்லிகாதேவி இராஜரட்ணம் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

1998 ஆம் ஆண்டு மாணவர்கள்,
யாழ். மத்திய கல்லூரி.
(59170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடு

திருகோணமலை, செப். 13

திருமலை நகர சபையினால் ரூபா 60 லட்சம் செலவில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுச் சந்தையைத் திறப்பதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இன்றுடன் ஒருவருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு இன்று திருமலையில் பூரண துக்கதினமும் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

மேற்படி துக்கதினம் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் —

சகல வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவுச் சாலைகள் யாவும் முழுமையாக மூடப்படல் வேண்டும் என்றும் —

எந்தவிதமான வாகனப் போக்குவரத்துக்களும் இடம் பெறக் கூடாது என்றும் —

பொதுமக்கள் சந்தைகளுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ சென்று பொருள்களைக் கொள்வனவு செய்யக் கூடாது என்றும் — கோரப்பட்டுள்ளது.

(இ-7)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், செப். 13

அல்லாரை அறுகம்புலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த சகஸ்ர சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

(ஐ-8)

★ ★ ★

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்பிகையின் 5 ஆயிரத்து 225 ஆவது ஜெயந்தி தினம் இன்று கொண்டாடப்படவுள்ளது.

நள்ளிரவு 12 மணிதொடக்கம் அதிகாலை 2 மணிவரை விஷேட அபிஷேகமும் வசந்த மண்டபப் பூசையும் இடம்பெற்று அன்னையின் திருவீதி உலாவும் நடைபெறும்.

இரவு கலை நிகழ்ச்சிகளும் அருளாசி உரையும் இடம் பெறும்.

நெல்லண்டைப் பத்திரகாளி பிரதம குருவும் ஹாட்லிக் கல்லூரி ஆசிரியரும், அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டத் தலைவருமான சிவஸ்ரீ சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள் அருளாசி உரை நிகழ்த்துவார்.

(ஐ-15)

★ ★ ★

மீசாலை அருள்மிகு திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகாயாகம் இன்று ஞாயிறு காலை 7 மணி முதல் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ எஸ். சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

(இ-31)

# ஈ. பி. டி. பி. அனுதாபம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். மாநகர சபைக் கட்டடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் பலியான அனைவருக்கும் ஈ. பி. டி. பி. தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறது.

இவ்வாறு ஈ. பி. டி. பி. அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் கே. ஜெகன் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுத்தாக்குதலின் போது உயிரிழந்த யாழ். மாநகர மேயர் மற்றும் இராணுவ, பொலீஸ் அதிகாரிகளினதும், மாநகர ஊழியர்களினதும் குடும்பங்களுக்கு ஈ.பி.டி.பி. தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறது. என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## சான்றிதழ்

யாழ். இந்துக் கல்லூரி தொலைக் கல்வி நிலையத்தில் மூன்று மாதங்கள் தொழில்சார் அபிவிருத்திப் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று ஞாயிறு காலை 9.00 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்த வைபவத்தில் வலயம் ஒன்றின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (இ-9)

## யாகம்

யாழ்ப்பாணம், செப். 13

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் அமைதியும், சாந்தியும் நிலவவேண்டி மஹா கணபதி யாகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

பதினொராவது வருடமாக இம்முறையும் இந்த யாகம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. நண்பகல் அன்னதானம் வழங்கலும் இடம் பெறும்.

## மேயர் சிவபாலன்...

(முதலாம் பக்கத் தொடர்)

இறுதிச் சடங்குகள் கண்டி மஹியாவையில் பூரண இராணுவ மரியாதைகளுடன் நடைபெறும்.

உயிரிழந்த ஏனைய பொலீஸ் அதிகாரிகள் மற்றும் படையினர் சடலங்கள் அவரவர் சொந்த இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

மேயர் சிவபாலனின் பூதவுடல் நேற்று பிற்பகல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

அவரது பூதவுடல் நேற்று பிற்பகல் 3 மணிக்கு அவரது சொந்த ஊரான சித்தன்கேணிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட அவரது பூதவுடலுக்கு அவரது ஊரைச் சேர்ந்த பொதுமக்களும் உறவினர்களும் பெருமனவில் அஞ்சலி செலுத்தினர்.

மேயரின் இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் நாளை திங்கட்கிழமை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

மேயரின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றுவதற்காக கொழும்பிலிருந்து அவரது மனைவி திருமதி தவமலர் சிவபாலன், உறவினர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் மாவை. சேனாதிராசா, யாழ். மாநகர சபைப் பிரதி மேயர் ந. ரவிராஜ் மாநகரசபை உறுப்பினர்கள் எஸ்.எஸ். கணேந்திரன், எஸ். அரவிந்தன் உட்பட 21 பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி, மாநகரசபை உறுப்பினர் க சின்னத்துரை ஆகியோர் நேற்று முன்தினம் முதல் யாழ். நகரில் தங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-139-9-7-5-6-173-15)


## வகுப்புகள்

ஆவரங்காலில் ஆரப்பமாகிவிட்டன!

தமிழ் — ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் நடைபெறுகின்றன.

தொடர்பு:
A. C. O.
சந்தையடி ஒழுங்கை, ஆவரங்கால்.

(59171)


# தொழில் நுட்பக்கல்லூரி:

## மாணவர்களின் போக்குவரத்துக்கு வீதியைத் திறந்து விடுமாறு கோரிக்கை

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் பிரதான வாயிலைப் பயன்படுத்துவதற்கு வசதியாக பிறவுண் வீதியின் அப்பாகத்தை போக்குவரத்துக்குத் திறந்து விடுமாறு தொழில் நுட்பக்கல்லூரியின் விரிவுரையாளர்களும், மாணவர்களும் 511 ஆவது பணியணியின் தளபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

தொழில் நுட்பக்கல்லூரியின் பிரதான வாயில் பிறவுண் வீதியில் இருக்கின்றது. ஆனால் பிறவுண் வீதியின் அப்பகுதி பொதுமக்கள் பாவனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே மாணவர்கள் அனைவரும் பிரம்படி வீதியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதையூடாகவே வந்து செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது. கடந்த சில வாரங்களாகவே பிரதான வாயிலுக்கு வருவதற்கு ஒற்றையடிப்பாதை ஒன்று திறந்து விடப்பட்டுள்ளது. இந்த ஒற்றையடிப் பாதையால் ஒரு தடவையில் ஒருவர் மட்டுமே பயணம் செய்யக்கூடியதாக உள்ளது. அத்துடன் தொழில்நுட்பக் கல்லூரியின் திருத்த வேலைகள் நடைபெற்றுவருகின்றன. அதற்குத் தேவையான பொருள்களை, வாகனங்களைக் கொண்டு வரமுடியாத ஒரு நிலையும் காணப்படுகின்றது.

எனவே இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு மாணவர்களின் இடைஞ்சல்கள் நீங்கவும் மக்கள் போக்குவரத்து தடையின்றி நிகழவும் பிறவுண் வீதியின் அப்பகுதியை போக்குவரத்துக்குத் திறந்து உதவுமாறு அக்கடிதத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது.

[ஐ-9]


OXFORD ENGLISH ACADEMY

By: MR. B. JOTHY

நெல்லியடியில்:
3 ஆவது பிரிவு
ஆரம்பம்: 16-09 98
முற்பகல் 11 மணி
(அனுமதியை MATHS CENTRE இல் பெறவும்)

பருத்தித்துறையில்:
ஆலடிப்பிள்ளையார் வீதி, சுப்பர்மடம்.
7 ஆவது பிரிவு
ஆரம்பம்: 16-09-98
பிற்பகல் 4 மணி
[அனுமதியை அலுவலகத்தில் பெறவும்]

[59127]



BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

A/L 99 இரசாயனம் PAPER CLASS

திரு. சிவத்திரன்
B. Sc. (Hons)

ஆரம்பம் 16-09-98
புதன் 3-30 p m.

(59107)


## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்)

காது தொடர்ந்து படகைச் செலுத்தியதனால் கடற்படையினர் அப்படகை நோக்கி தாக்குதல்தொடுத்து படகை மூழ்கடித்தனர் எனவும் —

அதில் பயணம் செய்தஇருவரும் உயிரிழந்தனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## நிபந்தனை...

( முதலாம் பக்கத் தொடர் )

போன்று விடுதலைப்புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த முடியாது.

இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் படையினர் பல வெற்றிகளைப் பெற்றுள்ளமையால் யுத்தம்விரைவில் முடிவுக்கு கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

(இ-9)

## மாதர்சங்க விழா

நெல்லியடி, செப். 13

புலோலி வடகிழக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் விழா இன்று ஞாயிற்றுக்கிழமைபி.பகல் 3 மணிக்கு புலோலி கிழக்கு உத்திராவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயராசா நவமணி தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

(ஐ-109)

## மக்கள்...

(இரண்டாம்பக்கத்தொடர்)

பால் துயருற்றிருக்கும் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜனநாயகத்தின் அத்தியாவசியத்தை தொடர்ந்து வற்புறுத்துவோம் — இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3-ரீ)

## லங்கா...

(முதலாம் பக்கத் தொடர்

கடந்த இரு தினங்களாக தொகுதி, தொகுதியாக மன்னாரிலிருந்து திருமலைக்கு அழைத்து வரப்பட்டனர்.

எஞ்சியுள்ள 500பேர் இன்று காலை பஸ்கள் மூலம் திருமலைக்கு அழைத்து வரப்படுவர் எனவும் —

பின்னர் கண்ணாடித் தொழிற்சாலையில் உள்ள அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டு நாளை பிற்பகல் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனவும் —

வவுனியா மற்றும் பிற இடங்களில்தங்கியுள்ளவர்கள் நாளை நடைபெறும் கப்பல் சேவை மூலம் யாழ். அனுப்பி வைக்கப்படமாட்டார்கள் எனவும் —

மீண்டும் ஒரு கப்பல் சேவையை நடத்துவது பற்றி இதுவரை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் எஸ். வேலும் மயிலும் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

[இ-7]

## மக்கள் அஞ்சலிக்...

(முதலாம் பக்கத் தொடர்)

களும் நேற்று தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இதற்கு முன்னதாக இந்த மூவரினது சடலங்களும் மரண விசாரணையை அடுத்து பிரேத பரிசோதனையின் பின் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

யாழ். மாநகர சபை உதவி ஆணையாளரும் நிர்வாக அதிகாரியுமான சு. பத்மநாதனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து உறவினர் வந்த பின்பே இறுதிக்கிரியைகள் பற்றி தீர்மானிக்கப்படும்.

யாழ். நகரிலுள்ள தமிழ்க் கட்சிகளின் காரியாலயங்களில் இவர்களுக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

(இ-139-173-15-9-7-5)


எமது ஒறிஜினல் வீடியோ CD வெளியீடு!

★ என் ஆச ராசாவே
★ உன்னிடத்தில் என்னைக்கொடுத்தேன்
★ கல்யாணகலாட்டா
அடுத்த வெளியீடு!
★ அண்ணன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/4864)



# சிவநெறி கல்வி நிலையம்

(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

## புலமைப் பரிசில் பரீட்சை-1

முதல் 5 இடங்களைப் பெற்றோர்

1. பா. கஜானன் — பரியோவான் கல்லூரி
2. நி. சிந்துயா — ஆனந்தா வித்தியாலயம்
3. க. கோபிகிருஷ்ணா — யாழ். மத்திய கல்லூரி
4. க. அச்சுதன் — பரியோவான் கல்லூரி
5. இ. கயிலாயினி — சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

2ஆவது பரீட்சை:
13-08-98 ஞாயிறு (இன்று) பி. ப. 2-00 மணி

வினாத்தாள் தேவையான நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/4863)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் [illegible] பார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது [illegible] மனையில் 13-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org